# 6. முக்கோணவியல்

## பயிற்சி 6.1 – க்கான அறிமுகம்

### நினைவில் கொள்ள…

**முக்கோணவியல் விகிதங்கள்:** $0^{\circ} < \theta < 90^{\circ}$ என்க.




செங்கோண முக்கோணம் $OMP$ யில்

$$\sin\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{கர்ணம்}} = \frac{MP}{OP}$$

$$\cos\theta = \frac{\text{அடுத்துள்ள பக்கம்}}{\text{கர்ணம்}} = \frac{OM}{OP}$$

மேற்கண்ட இரண்டு முக்கோண விகிதங்களிலிருந்து மற்ற நான்கு முக்கோணவியல் விகிதங்களை பின்வருமாறு எழுதலாம்

$tan\theta = \frac{sin\theta}{cos\theta}$; $cot\theta = \frac{cos\theta}{sin\theta}$; $cosec\theta = \frac{1}{sin\theta}$; $sec\theta = \frac{1}{cos\theta}$

**குறிப்பு:** $\theta$ வை ஒரு கோணமாகக் கொண்ட எல்லா செங்கோண முக்கோணங்களும் வடிவொத்தவையாக இருக்கும். எனவே, இவ்வாறான செங்கோண முக்கோணத்தில் வரையறுக்கப்பட்ட முக்கோணவியல் விகிதங்களானது தேர்ந்தெடுக்கப்படும் முக்கோணங்களை பொருத்து அமையாது.

**நிரப்புக்கோணங்களின் முக்கோணவியல் விகிதங்கள்:**

| | | |
|---|---|---|
| $sin(90^{\circ} - \theta) = cos\theta$ | $cos(90^{\circ} - \theta) = sin\theta$ | $tan(90^{\circ} - \theta) = cot\theta$ |
| $cosec(90^{\circ} - \theta) = sec\theta$ | $sec(90^{\circ} - \theta) = cosec\theta$ | $cot(90^{\circ} - \theta) = tan\theta$ |

**$0^0, 30^0, 45^0, 60^0, 90^0$ க்கான முக்கோணவியல் விகிதங்களின் அட்டவணை**

| $\theta$ / முக்கோணவியல் விகிதங்கள் | $0^{\circ}$ | $30^{\circ}$ | $45^{\circ}$ | $60^{\circ}$ | $90^{\circ}$ |
|---|---|---|---|---|---|
| $\sin\theta$ | 0 | $\frac{1}{2}$ | $\frac{1}{\sqrt{2}}$ | $\frac{\sqrt{3}}{2}$ | 1 |
| $\cos\theta$ | 1 | $\frac{\sqrt{3}}{2}$ | $\frac{1}{\sqrt{2}}$ | $\frac{1}{2}$ | 0 |
| $\tan\theta$ | 0 | $\frac{1}{\sqrt{3}}$ | 1 | $\sqrt{3}$ | வரையறுக்க இயலாது |
| $\text{cosec}\theta$ | வரையறுக்க இயலாது | 2 | $\sqrt{2}$ | $\frac{2}{\sqrt{3}}$ | 1 |
| $\sec\theta$ | 1 | $\frac{2}{\sqrt{3}}$ | $\sqrt{2}$ | 2 | வரையறுக்க இயலாது |
| $\cot\theta$ | வரையறுக்க இயலாது | $\sqrt{3}$ | 1 | $\frac{1}{\sqrt{3}}$ | 0 |

**குறிப்பு:**

$$(\sin\theta)^2 = \sin^2\theta$$
$$(\cos\theta)^2 = \cos^2\theta$$
$$(\tan\theta)^2 = \tan^2\theta$$
$$(\text{cosec}\,\theta)^2 = \text{cosec}^2\,\theta$$
$$(\sec\theta)^2 = \sec^2\theta$$
$$(\cot\theta)^2 = \cot^2\theta$$

**முக்கோணவியல் முற்றொருமைகள்:**

| முற்றொருமை | மாற்று அமைப்புகள் |
|---|---|
| $\sin^2\theta + \cos^2\theta = 1$ | $\sin^2\theta = 1 - \cos^2\theta$ (or) $\cos^2\theta = 1 - \sin^2\theta$ |
| $1 + \tan^2\theta = \sec^2\theta$ | $\tan^2\theta = \sec^2\theta - 1$ (or) $\sec^2\theta - \tan^2\theta = 1$ |
| $1 + \cot^2\theta = cosec^2\,\theta$ | $\cot^2\theta = cosec^2\theta - 1$ (or) $cosec^2\theta - \cot^2\theta = 1$ |

**குறிப்பு:** மேற்க்கண்ட முக்கோணவியல் முற்றொருமைகள் $\theta$ வின் அனைத்து மதிப்புகளுக்கும் உண்மையாகும். ஆனால் நாம் ஆறு முக்கோணவியல் விகித கோணங்களை $0^{\circ} < \theta < 90^{\circ}$ என மட்டும் எடுத்துக்கொள்வோம்.

## பயிற்சி 6.2 – க்கான அறிமுகம்

### நினைவில் கொள்ள…




**பார்வைக்கோடு:** நாம் ஒரு பொருளை உற்று நோக்கும் போது நமது கண்ணிலிருந்து அப்பொருளுக்கு வரையப்படும் நேர்க்கோட்டை "பார்வை கோடு" என அழைக்கிறோம்.




**ஏற்றக்கோணம்:** ஒரு பொருள் நம் கிடைநிலைப் பார்வைக்கோட்டிற்கு மேலே இருக்கும் போது கிடைநிலைப் பார்வைக் கோட்டிற்கும், பார்வைக் கோட்டிற்கும் இடையேயுள்ள கோணம் ஏற்றக் கோணம் எனப்படும். அதாவது அப்பொருளை பார்க்க நாம் தலையை சற்றே உயர்த்தும் நிலையே ஆகும்.




**இறக்கக் கோணம்:** ஒரு பொருள் நம் கிடைநிலைப் பார்வைக்கோட்டிற்குக் கீழே இருக்கும் போது, பார்வைக்கோட்டிற்கும் கிடைநிலைப் பார்வைக் கோட்டிற்கும் இடையேயுள்ள கோணம் இறக்கக் கோணம் எனப்படும். அதாவது அப்பொருளை நாம் பார்க்க தலையை சற்றே தாழ்த்தும் நிலையே ஆகும்.




**கிளைனோ மீட்டர்:** பொதுவாக ஏற்றக்கோணம் மற்றும் இறக்கக் கோணங்களைக் கிளைனோ மீட்டர் என்ற கருவியின் மூலம் கண்டறியலாம்.

**குறிப்பு:**

| | |
|---|---|
| கொடுக்கப்பட்ட புள்ளியிலிருந்து ஒரு பொருளின் உயரம் அதிகரிக்கும் போது அதன் ஏற்றக்கோணத்தின் அளவும் அதிகரிக்கும். $h_1 > h_2$ எனில், $\alpha > \beta$ ஆகும்.   | செங்குத்தாக உள்ள கோபுரம் அல்லது கட்டிடம் போன்றவற்றின் அடியை நோக்கி நகரும்போது அதன் ஏற்றக்கோணம் அதிகரிக்கும். $d_2 < d_1$ எனில், $\beta > \alpha$ ஆகும்.   |

## பயிற்சி 6.3 – க்கான அறிமுகம்

### நினைவில் கொள்ள…




குறிப்பு: ஏற்றக்கோணமும், இறக்கக் கோணமும் ஒன்றுவிட்ட கோணமாக இருப்பதால் அவை இரண்டும் சமமாக இருக்கும்.